# தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

**8வது கீழ் தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015.**

**இணையதளம் : www.forests.tn.gov.in தொலைபேசி எண்: 044 – 2434 1251**

## வனவர் பதவிக்கான நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்வது குறித்த முக்கிய அறிவுரைகள் (விளம்பர எண்.1 / 2018 நாள் 06.10.2018, அறிவிக்கை எண். 1)

1) தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் வெளியிட்டப்பட்ட வனவர் பதவிக்கான நுழைவுச் சீட்டினை 30.11.2018 முதல் கீழ்க்கண்ட தொடர்பு மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.

   https://tnfusrc.in/drfsoct18/cloea_nov18/login.php?appid=aa8adedd6a0316958e8da3951bed0389

2) விண்ணப்பதாரர்கள், 30.11.2018 முதல் பதிவிறக்கம் செய்யும் நுழைவுச் சீட்டில் இணையவழித் தேர்வு எழுதும் நகரம் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும். அதில் தேர்வு மையத்தின் பெயரை குறுஞ்செய்தி / மின்னஞ்சலில் விரைவில் அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கும்.

3) அதன்படி, தேர்வு மையம் மற்றும் முகவரி ஆகிய விபரங்களைத் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண் மற்றும் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு கீழ்குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி குறுஞ்செய்தி / மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

| இணையவழித் தேர்வு நாள் | அட்டவணை (இணையவழித் தேர்வு நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பு) |
|---|---|
| 06.12.2018 | 03.12.2018 |
| 07.12.2018 | 04.12.2018 |
| 08.12.2018 | 05.12.2018 |
| 09.12.2018 | 06.12.2018 |

குறிப்பு – ஒருவேளை, விண்ணப்பதாரர்கள் குறுஞ்செய்தி / மின்னஞ்சலை பெறவில்லையெனில் (நடக்கக்கூடாதது), விண்ணப்பதாரர்கள் நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்யும் தொடர்பில் உள்நுழைந்து (பதிவு எண் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம்) மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணைப்படி அவர்களது நுழைவுச் சீட்டில் உள்ள தேர்வு மைய விவரம் மற்றும் முகவரியைக் காணலாம்.

4) நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்வது குறித்த “எதிர்பார்க்கப்படும் வினாக்கள்” ஏற்கனவே நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் செய்யும் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ளது.

உறுப்பினர் செயலர்

தநாவசீபதேகு